**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**
CC.No.46/2024
Prosecution witness.07

பெயர் : சரவணன் தொழில் :

தந்தை/கணவர் பெயர் : மூக்கன் கிராமம் :

வயது : தாலுகா :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

07.05.2026

(எதிரிகள் 3 மற்றும் 4 ஆஜர், 1 மற்றும் 2ம் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது பார்த்திபனூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 02.09.2023ம் தேதி காலை 08.30 மணியளவில் நான் முதுகுளத்தூர் காவல் நிலையப் பொறுப்பில் இருந்தபோது முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அசா.1 கோவிந்தராஜ் என்பவரை விசாரித்து அவர் அளித்த புகார் மனுவை பெற்று நிலையம் வந்து காலை 10.30 மணிக்கு புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.172/2023 இதச பிரிவுகள் 294(b), 323–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2)** பிறகு வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 11.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் லெட்சுமணன் மற்றும் மாடசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3)** அன்றைய தினமே சம்பவயிட சாட்சிகளான கோவிந்தராஜ், காளீஸ்வரி, சுசிலா, சுரேஷ், பூமிநாதன், லெட்சுமணன் மற்றும் மாடசாமி ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கு சம்பவம் உண்மை என தெரிய வந்ததாலும் எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததாலும் எதிரிகளை தேடிவந்த நிலையில் 13.09.2023ம் தேதி 13.05 மணிக்கு

காவல்நிலையத்தில் ஆஜரான எதிரிகளை காவல்நிலையத்தில் முன்பு வைத்து கைதுக்கான காரணம் கூறி கைது செய்து தக்கபிணையத்தில் விடுவித்தேன்.

**4)** பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட அசா.1 க்கு சிகிச்சை அளித்த முதுகுளத்தூர் அரசு மருத்துவர் திருமதி.சிந்து மற்றும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.முகமதுஅமீர்கான் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றுதலுடன் கூடிய விபத்து பதிவேடு பெற்றேன். மருத்துவர் அளித்த காயச்சான்றிதழில் அசா.1 க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என தெரியவந்ததால் வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(b), 323 இதச பிரிவிலிருந்து 294(b), 325 ஆக பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

**5)** பின்னர் புலன் விசாரணையை 20.09.2023 ம் தேதி முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 325 கீழ் இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) மருத்துவமனையிலிருந்து தகவலை யார் வழங்கினார்கள் என்றால் அது தற்போது எனக்கு நினைவில் இல்லை. பொதுவாக காவல்நிலையத்திற்கு மருத்துவமனையிலிருந்து தகவல் வந்தால் பொது நாட்குறிப்பேட்டில் எத்தனை மணிக்கு அந்த தகவல் கிடைக்கப்பெற்றது என்பதை குறிப்பு செய்ய வேண்டும் என்றால் சரிதான். அசா.1 புகார் மனுவை கொடுத்தார். ஆனால் அவர் கைப்பட எழுதிக்கொடுக்கவில்லை. யார் புகாரை எழுதினார்கள் என்பதை நான் பார்க்கவில்லை. அசா.1 மருத்துவமனையில் வைத்து தான் புகார் மனுவை என்னிடம் கொடுத்தார்.

2) சம்பவம் நடந்த விதத்தை குறித்தும் எந்த எதிரியால் என்னென்ன சம்பவம் நேர்ந்தது என்பதை குறித்தும் புகார் மனுவில் அசா.1 குறிப்பிட்டுள்ளாரா என்றால் குறிப்பிட்டுள்ளார். எதிரிகள் அனைவரும் சேர்ந்து ஆபாசமாக பேசி கீழே தள்ளிவிட்டு அவர்களில் ரமேஷ்பாண்டி அசா.1 யை இடதுமோதிர விரலில் மிதித்ததாக கூறியுள்ளார். யார் அவரை கீழே தள்ளினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் ஆபாச வார்த்தைகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல குறிப்பிடப்பட்டுள்ளது. ஆபாச வார்த்தையை நால்வரும் சேர்ந்து பேசியதாக தான் அசா.1

குறிப்பிட்டுள்ளார்.

3) நான் விசாரித்த பட்டியல் சாட்சிகள் அனைவரும் அசா.1ன் உறவினர்கள் என்றால் சரிதான் வேறு யாரும் சாட்சியாக இருக்க முன் வரவில்லை. சாட்சி பட்டியலில் உள்ள 2 முதல் 5 வரையிலான சாட்சிகள் அனைவரும் கேள்விநிலை சாட்சிகளாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அசா.1 அளித்த புகார் மனுவில் அவர் பேருந்து நிறுத்ததில் வந்து நின்றுகொண்டிருந்தபோது சம்பவம் நடைபெற்றதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். நான் தயார் செய்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில் புகார்தாரர் நின்றுகொண்டிருந்த இடத்திற்கும் பேருந்து நிறுத்ததிற்கும் இடையே குமாரக்குறிச்சி செல்லும் தார்சாலை உள்ளதாகவும், தார்சாலைக்கு மேற்கு பக்கமாக சம்பவ இடம் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்னிடம் அசா.1 விசாரணையில் பேருந்து நிறுத்தம் அருகே நின்றுகொண்டிருந்ததாக கூறினார் அதனால் தான் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன்.

4) பேருந்து நிறுத்ததிற்கும் சம்பவ இடத்திற்கும் இடையே உள்ள தூரத்தை நான் குறிப்பிட்டு பார்வை மகசரிலும், மாதிரி வரைபடத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பேருந்து நிறுத்ததிற்கும் சம்பவ இடத்திற்கும் இடையே 80 அடி தொலைவு இருக்கும் என்றால் சரியல்ல 50 அடி தொலைவு இருக்கும். தோராயமாகத்தான் சொல்ல முடியும் அளந்துபார்த்தால் தான் தூரத்தை சரியாக சொல்ல முடியும் என்றால் சரிதான். பார்வை மகசர் சாட்சிகளான லட்சுமணன் மற்றும் மாடசாமி ஆகியோர்கள் ஆதனக்குறிச்சியை சேர்ந்தவர்கள். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள ஊர் குமாரக்குறிச்சி என்றால் சரிதான். பார்வை மகசர் தயார் செய்யும்போது சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள ஊர்க்காரர்கள் தான் சாட்சியாக சேர்க்க வேண்டும் என்றால் சரியல்ல சம்பவ இடத்தில் அந்த சமயத்தில் யார் இருக்கிறார்களோ அவர்களை சாட்சிகளாக சேர்க்கலாம்.

5) ஆதனக்குறிச்சிக்கும் சம்பவ நடந்ததாக சொல்லப்படுகிற பேருந்து நிறுத்ததிற்கும் இடையே 6 கி.மீ. தொலைவு இருக்கும் என்றால் சரிதான். 02.09.2023ம் தேதி பார்வை மகசர் சாட்சிகளை விசாரித்ததாக நான் கூறியுள்ள நிலையில் மேற்படி சாட்சிகள் எதற்காக சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்பதை நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான் ஆனால் சம்பவ இடமானது அவர்களின் ஊருக்கு செல்லக்கூடிய ரோடு ஆகும். பார்வை மகசர் சாட்சிகளாக வழக்கில்

சேர்க்கப்பட்டவர்கள் அசா.1ன் ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை நிலையம் வரவழைத்து அவர்களிடம் கையொப்பம் பெற்றுள்ளேன் என்றாலும் உண்மையில் நான் சம்பவ இடத்திற்கு செல்லவே இல்லை என்றாலும் சரியல்ல. புகார்தாரர் அளித்த புகாரில் குமாரக்குறிச்சியில் உள்ள ஒரு கோவிலில் அசா.1க்கும் எதிரிகளுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டு சமாதானம் அடைந்துள்ளதாக கூறியுள்ளார் என்றால் சரிதான்.

6) சம்பவத்திற்கு காரணமாக இருந்த மேற்படி கோவிலை சேர்ந்த ஊர்க்காரர்களை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி ரமேஷ்பாண்டியன் அணிந்திருந்த 2 பவுன் தங்க சங்கிலியை அசா.1யும், அவரது நண்பர்களும் சேர்ந்து பறித்துவிட்டு அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக இந்த புகாரை பொய்யாக கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் முதுகுளத்தூரில் மருத்துவர் சிந்துவை விசாரித்துவிட்டு எத்தனை மணிக்கு இராமநாதபுரம் அரசு மருத்துவமனை மருத்துவர் முகமதுஅமீர்கானை விசாரிக்க சென்றேன் என்றால் எனக்கு நேரம் சரியாக நினைவில் இல்லை. முதுகுளத்தூரிலிருந்து இராமநாதபுரம் 45 கி.மீட்டலிருந்து 50 கி.மீ. தொலைவு இருக்கும். நான் அன்றைய தினம் உத்திரகோசமங்கை ஊர் வழியாக சென்றேன்.

7) நான் மருத்துவர் முகமதுஅமீர்கானை விசாரித்து அவர் கூறிய சங்கதிகளைத்தான் பதிவு செய்தேனா என்றால் ஆமாம். அவரை நான் விசாரித்தபோது அவர் என்னிடம் 04.09.2023ம் தேதி 11.55 மணியளவில் அசா.1 இடது மணிக்கட்டில் காயத்துடன் வந்ததாக கூறினாரா என்றால் ஆமாம். ஆனால் மருத்துவர் முகமதுஅமீர்கான் நீதிமன்ற சாட்சியத்தில் அசா.1க்கு இடதுமணிக்கட்டில் காயம் இருந்ததாக கூறவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அசா.1னிடமிருந்து நான் புகார் மனு பெற்றபோது அவர் புகார் மனுவில் இடது மோதிர விரலை தவிர்த்து உடலில் வேறு இடங்களில் காயம் இருந்ததாக கூறவில்லை என்றால் முதுகில் சிராய்ப்பு காயம் இருந்ததாக கூறியுள்ளார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிற இடமானது சாலையின் ஓரம் என்பதால் புழுதி மண் நிறைந்திருக்கும் என்றால் சரிதான்.

8) அசா.1 நான் புகார் மனுவை பெற்றபோது பனியன் அணிந்திருந்தார். அசா.1 தனக்கு தானே காயத்தை ஏற்படுத்திக்கொண்டு எதிரிகளை பழிவாங்கவேண்டும் என்ற நோக்கத்திலும், செயின் பறிப்பு வழக்கிலிருந்து தப்பும் நோக்கிலும் பொய்யாக புகார் மனுவை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. செயின் பறிப்பு சம்மந்தமாக எங்களுக்கு எந்த தகவலும் வரவில்லை. நான் சரிவர புலன்விசாரணை மேற்கொள்ளவில்லை

என்றாலும், அவ்வாறு மேற்கொண்டிருந்தால் குமாரக்குறிச்சி கோவிலில் நடந்த சம்பவம் குறித்தும் விசாரித்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன விதத்தில் சொன்ன வகையில் சொன்ன நேரத்தில் சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும், சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு எதிரிகளுக்கு எதிராக பொய்யாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.